பட்ட குழுவாயிருத்தலும் வேண்டுமென்பதோடு அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலா மென்பதுடனும், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடனும், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுதத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு கற்றல் நடவடிக்கைகளைத் தொடரும் மாணவர்களின் பொருளாதார நிலைசார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி நிதி வசதியளித்தல்;

(ஆ) மலையக மாணவர்களின் உயர்கல்வியை ஊக்குவிப்பதன் மூலம் உயர்கல்வியைத் தொடர்வதற்கான அவர்களின் ஆர்வத்தை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்துச் செயற்படுத்தல்;

(இ) மலையக மாணவர்களின் உயர்கல்வி பிரவேசங்களை அதிகரிப்பதற்கான உயர்கல்வி பெறுவதன் முக்கியத் துவம் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங் களை செயற்படுத்தல்;

(ஈ) தொழிநுட்பக் கல்லூரி, தொழில்சார் கல்வி என்பவற்றைப் பெற்றுக் கொள்வதில் மாணவர்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்துதலும், விளக்கமின்மையை நீக்கலும் கற்கை நெறிகளை தொடரும் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கலும்; அத்துடன்

(உ) மலையக மாணவர்கள் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வித் துறைகளைத் தொடர நிதி வசதியளித்தல்.

